## ஏப்ரல் - 1

**"நீங்கள் சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்."**

**- மாற் 14 : 38**

சோதனைகள் நம்மேல் வருவதற்கு முன்பு, அவைகள் எத்தன்மையாயிருக்கும் என்று நாம் அவைகளைத் தெளிவாகக் கண்டுகொள்ளக் கூடாதிருப்போம். ஏனென்றால், முன்னதாகவே அவைகளைப் பற்றி எல்லாம் அறிந்தோமானால், அவைகள் கடுமையில்லாத சோதனைகளாக மாத்திரம் இருக்கும். ஆகையால், விழித்திருந்து எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள். ஏனென்றால், பத்திரமான ஒரே வழி ஆயத்தமாக இருப்பதுதான். ஏனென்றால், உங்கள் எதிராளியான பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடுகிறான். உங்களுடைய பெலவீனமான காரியங்களை அவன் அறிந்திருக்கிறான். மேலும் அவைகளை அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறான். நாம் ஜெயங்கொள்ள வேண்டுமானால், நம் ஒவ்வொருவருக்கும் நமது இருதயங்களிலே ஆவியின் குணசீலங்களும் "ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையும் வேண்டியதாயிருக்கும்."

**"என் ஆத்துமாவே உன்னைக் காவல் புரி**
**பத்தாயிரம் எதிரிகள் கிளம்புகிறார்கள்**
**பாவத்தின் பெருந்திரள்கள் வலிமையாய் நெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்**
**பந்தயப் பொருளிலிருந்து உன்னை இழுத்துச் செல்ல."**

**- Z 03, 119 (R 3178).**

நாம் மாம்சத்திலிருக்கும் வரை சோதனைகள் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து கொள்கின்றன. நாம் "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற இந்த எச்சரிப்பைக் கவனித்து நடந்தால், நம்மை வசீகரித்து சிக்க வைக்க இவைகள் சக்தியற்றவைகளாகிவிடும். வார்த்தையின் வெளிச்சத்தில் நமது குணங்களையும், எண்ணங்களையும், நோக்கங்களையும் வார்த்தைகளையும், கிரியைகளையும், சூழ்நிலைகளையும் நம்மீது அவைகள் கொண்டுள்ள செல்வாக்குகளையும் ஜாக்கிரதையாக சோதனை செய்வது, இந்த யோசனைகளின் உண்மையான குணத்தை வெளிப்படுத்தும். மேலும் தேவனுடைய வல்லமை நம்மை விடுவிக்க இருக்கிறது என்று கிறிஸ்துவின் நாமத்தில் உதவிக்காக ஏறெடுக்கும் ஜெபங்களில் நாம் சொல்லுகிறோம். அந்த வல்லமையின் மேல் வைக்கும் மனப்பூர்வமான நம்பிக்கை கிருபையை பெறச் செய்யும். அதனால் தப்பித்துக் கொள்ள ஒரு வழியும் கண்டு கொள்வோம். **-P ’20, 32.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 23:13; 34:12; உபா 4:9; சங் 119:9; நீதி 4:23-26; மத் 26:38-46; அப் 20:28-30; 1கொரி 16:13; எபே 6:18; மத் 6:5-13; 7:7,8; லூக் 11:11-13; 18:1; பிலி 4:6; 1தீமோ 2:8; எபி 4:16.

**கோபுர வாசிப்பு : Z ’13, 311 (R 5331).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின்படி இந்த வாரத்தில் என் அனுபவங்கள் எவை? எனக்கு உதவியாக அல்லது இடையூறாக அவற்றில் இருந்தவை எவை? ஏற்பட்ட பலன்கள் எவை?